
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1067

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# 'மைனாரிட்டி' தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

44

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

## இஸ்லாமிய கல்வி, கலை வளர்ச்சியில்...

**25.10.1999** அன்று தமிழ்நாட்டில் உருது அகாடமி அமைப்பதற்கான ஆணையை வெளியிட்டார் முத்தமிழறிஞர் கலைஞர். உருது மொழியின் வளர்ச்சிக்குப் பங்காற்றும் வகையில், உருவாக்கப்பட்ட இந்த அகாடமி, 27.02.2000 முதல் செயல்படத் தொடங்கி, கழக அரசு அமையும்போதெல்லாம் சிறப்பாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

அதன் தொடக்க விழாவில், பேசிய கலைஞர், உருது இலக்கியங்கள், கவிதைகள் மற்றும் படைப்பாளிகளைப் பட்டியலிட்டு, அவை தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்பட வேண்டிய அவசியத்தை எடுத்துரைத்தார். அத்துடன் உருது மொழியின் பெருமைகள் சிலவற்றையும் குறிப்பிட்டார். தவிர, "உருது மொழி வேறு எங்கேயோ உள்ள ஒரு நிலத்தின் மொழி அல்ல. உருதும் இந்திய மொழிதான் என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். வரலாற்றுக் காரணங்களால் உருது மொழியில் பார்சி - அரபு மொழிகளின் செல்வாக்கு பலவகைகளில் இடம்பெற்று இருந்தாலும் இலக்கண ரீதியில் இது முற்றிலும் இந்திய மொழியே" என வரலாற்றுச் சான்றுகளுடன் விளக்கினார். இந்த நிலைப்பாடுதான் பேரறிஞர் அண்ணா தொடங்கி, முத்தமிழறிஞர் கலைஞர், இன்று நம் கழகத் தலைவர் ஆகியோர் வரை தொடர்ந்துகொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் உருது மொழிப் பயன்பாடு, கல்வி நிறுவனங்கள் குறித்து கடந்த வாரங்களில் பார்த்தோம். அந்தக் கல்வி நிறுவனங்களின் வளர்ச்சிக்கும் இஸ்லாமிய கலைச் செயல்பாடுகளின் வளர்ச்சிக்கும் பக்கபலமாக உதவிக்கொண்டிருக்கிறது உருது அகாடமி.

### குழு அமைத்த கலைஞர்

சில மாநிலங்களில் உருது அகாடமி செயல்பட்டு வருவதைச் சுட்டிக்காட்டி, தமிழ்நாட்டில் உருது அகாடமி தொடங்க வேண்டும் என இஸ்லாமிய அமைப்புகள் நீண்டகாலமாக கோரிக்கை வைத்து வந்தன. அந்தக் கோரிக்கை 1996-ஆம் ஆண்டில், கலைஞர் நான்காவது முறையாக முதலமைச்சர் ஆன பின்னர் செயல்வடிவம் கண்டது.

1999-ஆம் ஆண்டில், அந்தக் கோரிக்கை தொடர்பாக ஆலோசனை நடத்த உத்தரவிட்ட கலைஞர், அதற்காக, அன்றைய கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் முத்துவீர கணபதி, சென்னைப் பல்கலைக்கழக உருது பேராசிரியர் சையத் சஜ்ஜட் உசைன் ஆகியோரைக் கொண்ட ஆலோசனைக் குழு அமைத்தார்.

இந்தக் குழு, அதே ஆண்டு ஆகஸ்ட் மாதம் கூடி, கர்நாடகம், ஆந்திர மாநிலங்களில் செயல்பட்டுக் கொண்டிருந்த உருது அகாடமியின் செயல்பாட்டு முறைகளை ஆய்வுசெய்து அறிக்கை தயாரித்தது. குறிப்பாக, பிற மாநிலங்களில் உருது அகாடமி எப்படிச் செயல்படுகிறது, அதற்கென எத்தகைய விதிகள் வகுக்கப்பட்டுள்ளன, எந்தெந்த வகைகளில் அரசு பக்கபலமாக இருக்கிறது என்கிற விவரங்களை அந்தக் குழு சேகரித்து, அறிக்கையாக அரசிடம் அளித்தது. அதன் அடிப்படையில், 25.10.1999 அன்று 'உருது அகாடமி' அமைக்கப்படும் என்று அறிவித்தார் கலைஞர்.

### முதல் தலைவர் பேராசிரியர்!

உருது அகாடமியின் தலைவராக கல்வி அமைச்சர், 21 உறுப்பினர்கள் கொண்ட ஆட்சிக்குழு, 11 உறுப்பினர்களைக் கொண்ட நிலைக்குழு ஆகிய கட்டமைப்புடன் இந்த அகாடமி உருவாக்கப்பட்டது. ஆட்சிக்குழுவில் தலைவருடன் துணைத்தலைவர், அலுவல் வழி உறுப்பினர்கள் நான்கு பேர், உருது கவிஞர்கள்-எழுத்தாளர்கள்-ஆராய்ச்சியாளர்களை உள்ளடக்கிய 15 உருது அறிஞர்கள் இடம்பெற்றனர்.

அரசு நியமிக்கும் ஆட்சிக் குழுவின் துணைத் தலைவரே நிலைக்குழுவின் தலைவராக செயல்படுவார். 4 அலுவல் வழி உறுப்பினர்களும், ஆட்சிக்குழுவில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 6 உருது அறிஞர்களும் நிலைக்குழுவில் செயல்படுவர். இரண்டு குழுவினருக்கும் பொறுப்புக்காலம் 3 ஆண்டுகள் என வரையறுக்கப்பட்டன.

இதன்படி, 2000-ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் முதல், அன்றைய கல்வி அமைச்சர் இனமானப் பேராசிரியர் தலைமையில் 'உருது அகாடமி' செயல்படத் தொடங்கியது. அதன் பின்னர், கழக ஆட்சியின் ஓராண்டு காலத்துக்குள் உருது மொழியின் படைப்புகள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டும், தமிழ் இலக்கியங்கள் உருது மொழியில் மொழிபெயர்க்கப்பட்டும் ஆக்கபூர்வ பணிகளை உருது அகாடமி முன்னெடுத்தது.

### முடங்கிய காலங்கள்

ஆனால், 2001-ஆம் ஆண்டில் அந்த முயற்சிகளை, அப்படியே முடக்கியது அன்றைய அ.தி.மு.க அரசு. சிறுபான்மையினர் பொருளாதாரத்தை மேம்படுத்த, 1999-இல் கலைஞர் கொண்டு வந்த 'சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தை' மீண்டும், பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்துடன் இணைத்ததுபோல, உருது அகாடமியையும் முடக்கினர்.

2006-ஆம் ஆண்டு மீண்டும் ஆட்சிக்கு வந்த கலைஞர், உருது அகாடமியை மீண்டும் சிறப்பாக இயங்க வைத்ததுடன், உருது மொழியைப் பாடமாகப் பயின்று, 10 மற்றும் 12 - ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெறும் 3 மாணவர்களுக்கும், மற்றும் 3 மாணவியர்களுக்கும் முதல், இரண்டு, மூன்று எனப் பரிசுகள் வழங்கும் திட்டத்தையும் 2007-ஆம் ஆண்டில் தொடங்கி வைத்தார். அதன்படி, வெற்றிபெற்ற 2009-10 ஆண்டில் ஒரு லட்சத்து 54 ஆயிரத்து 264 மாணவ, மாணவிகளுக்கும் 2010-11 கல்வி ஆண்டில் 2 லட்சத்து 42 ஆயிரத்து 301 மாணவ, மாணவிகளுக்கும் கல்வி உதவித் தொகை வழங்கினார். இந்தியாவின் எந்த மாநிலத்திலும் சிறுபான்மையினர் நலன் காக்கும் திட்டங்கள், இந்தளவுக்கு செயல்படுத்தப்படவில்லை என்கிற நிலையில், 2011-இல் மீண்டும் ஆட்சிமாற்றம் நிகழ்ந்தது.




2011-ஆம் ஆண்டு முதல் 2021-ஆம் ஆண்டு வரையிலான அ.தி.மு.க ஆட்சிக்காலத்தில் 'உருது அகாடமி' உறுப்பினர்கள் புதுப்பித்தல் நடைபெறவே இல்லை. குறிப்பாக, 3 உருது கல்விச் சரகங்களும் கலைக்கப்பட்டன. உருது அகாடமிக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்ற, இஸ்லாமிய அமைப்புகளின் குரலுக்கும் அப்போதைய அரசு செவிமடுக்கவில்லை. 2018-ஆம் ஆண்டில் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விக்கு, 'உருது அகாடமியை மீண்டும் செயல்படுத்துவோம்' என உறுதி அளிக்கப்பட்டாலும், சொன்னதுபோல நடைபெறவில்லை.

இந்தச் சூழலில், 2021-ஆம் ஆண்டில் அமைந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையிலான நம் திராவிட மாடல் அரசு உருது அகாடமிக்கு உறுப்பினர்களை நியமித்து, மீண்டும் புத்துயிரூட்டியது. உருது ஆசிரியர்களின் கோரிக்கையை ஏற்று, அ.தி.மு.க ஆட்சியில் கலைக்கப்பட்ட 3 உருது கல்விச் சரகங்களுக்குப் பதிலாக 6 உருது சரகங்களை அமைத்தார் நம் முதலமைச்சர். இன்று புத்துயிர்ப்போடு இயங்கிக் கொண்டிருக்கும் உருது அகாடமி, தமிழுக்கும் உருது மொழிக்குமான பாலமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மொழிச் சிறுபான்மையினரின் கல்வி உரிமைகள், கலை இலக்கிய செழுமைகளைத் திறனாய்ந்து பாதுகாத்து, தமிழையும் வளர்க்கிற ஓர் உள்ளடக்கிய பண்பைக் கொண்ட இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம் என்பது உருது அகாடமி மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

> "மொழிச் சிறுபான்மையினரின் கல்வி உரிமைகள், கலை இலக்கிய செழுமைகளைத் திறனாய்ந்து பாதுகாத்து, தமிழையும் வளர்க்கிற ஓர் உள்ளடக்கிய பண்பைக் கொண்ட இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம்!"

...நீளும்

## ஆயுத விநியோகக் கும்பலும் உ.பி. அரசும்!

அமைதியையும், மத நல்லிணக்கத்தையும் கட்டிக்காப்பதுதான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் கடமை. ஆனால், பா.ஜ.க.வும் அதன் கூட்டணி கட்சிகளும் ஆளும் மாநிலங்களில் வன்முறையை அரசே ஊக்குவிப்பதுபோல நிகழும் பல சம்பவங்கள் மக்களுக்கு அச்சத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன.

உத்தரப்பிரதேச மாநிலம் காசியாபாத்தில், தீவிர இந்து மதவெறியூட்டப்பட்ட, இந்து ரக்‌ஷா தளம் என்கிற அமைப்பினர் அங்குள்ள குடியிருப்புப் பகுதியில் வீடு வீடாக வாள், கோடரி போன்ற ஆயுதங்களை வழங்கியுள்ளனர். இதன்மூலம், காசியாபாத்தில் பெரும் கலவரத்துக்குத் திட்டமிட்டு வருகின்றனர். இது தொடர்பான தகவல்கள், காணொலிகள் வெளிவந்து, அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

இந்த அமைப்பினர், பத்து ஆண்டுகளுக்கும் மேலாகக் கண்மூடித்தனமான பல தாக்குதல்களை நடத்தியுள்ளனர். 2014-ஆம் ஆண்டில் ஆம் ஆத்மி அலுவலகத்தை சூறையாடினர். 2020-ஆம் ஆண்டில், டெல்லி ஜெ.என்.யு பல்கலைக்கழகத்தில் மாணவிகள் விடுதியில் நடத்திய கொடூர தாக்குதலில் 30 பேர் படுகாயமடைந்தனர். இந்தச் சம்பவங்கள் நாடு முழுவதும் கடும் கொந்தளிப்புகளை உருவாக்கின. கடந்த ஆண்டு, கன்வர் யாத்திரையின்போது அசைவம் விற்பனை செய்யக் கூடாது என கே.எஃப்.சி உள்ளிட்ட கடைகள் மீது தாக்குதல் நடத்தினர். இப்படி தொடர்ச்சியாக குற்றச் செயல்களில் ஈடுபட்டு வந்த இந்தக் கும்பல், தற்போது, வீடு வீடாக ஆயுதங்களைக் கொடுத்துள்ளதுடன், முஸ்லிம்களுக்கு எதிராகத் தாக்குதல் நடத்த தயாராக இருக்க வேண்டும் என வீடியோ வெளியிட்டுள்ளனர். 'வீடுதோறும் வன்முறை எண்ணத்தை விதைத்தவர்கள், இப்போது ஆயுதத்தை அளிக்கின்றனர், அரசு வேடிக்கை பார்க்கிறது' எனக் குற்றம் சாட்டியுள்ளார் அந்த மாநில எதிர்க்கட்சித் தலைவர் அகிலேஷ். அந்த மாநில அரசு உண்மையில் வேடிக்கைதான் பார்த்துக் கொண்டிருக்கிறது.

## ஃப்ளாஷ்பேக்



### திருமண வாழ்த்தும் மணிவிழா வாழ்த்தும்!



வே.சம்பத்குமார்

1980-ஆம் ஆண்டில் என் திருமணத்தை நடத்தி வைத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். அப்போது, என் தந்தை வேலாயுதம் அவர்கள், அன்றைய சைதாப்பேட்டை தொகுதி, 114-வது வட்டச் செயலாளராக இருந்தார். நான் அரும்பாக்கம், ரசாக் கார்டன் கலைஞர் மன்றத்தின் செயலாளராக இருந்தேன். 2014-ஆம் ஆண்டில் என் மணவிழாவின்போது, தலைவரிடம் வாழ்த்துபெற குடும்பத்துடன் சென்றிருந்தோம். என் மனைவி மலர்விழி, சென்னை மேற்கு மாவட்ட, இலக்கிய அணி துணை அமைப்பாளராக உள்ள என் தம்பி சேகர், மகன் உதயகுமார், மகள் காயத்ரி, பேரன்கள் ரித்தீஷ், நித்தீஷ் என அனைவரும் சென்றிருந்தோம். தலைவர் எங்களுக்கு திருமணம் நடத்தி வைத்த புகைப்படத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தார். அப்பா குறித்து நாங்கள் கூறியதும், அவரும் நினைவைப் பகிர்ந்துகொண்டார். தலைவர் அன்று எங்களுக்கு ஒதுக்கிய நேரம் பொன்னான நேரமாக அமைந்தது.

**- வே.சம்பத்குமார், ரசாக் கார்டன், அரும்பாக்கம், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நம் வரலாறு — குருக

### அண்ணாவின் பெயருக்கு கலைஞர் அறப்போர்!

1976-ஆம் ஆண்டு, ஜூன் 3-ஆம் தேதி பிறந்த நாளுக்கான முரசொலி வாழ்த்துச் செய்தியில், அண்ணாவின் பெயரை நீக்கச் சொன்னார் தணிக்கை அதிகாரி. அவர், உரிய விளக்கம் சொல்லாத நிலையில், ஜூன் 2-ஆம் தேதி அந்த வாசகங்களைக் கைப்பட எழுதி, துண்டு பிரசுரமாக அண்ணா சாலையில் மக்களிடம் நேரடியாக அளிக்கும் அறப்போராட்டத்தில் இறங்கினார் கலைஞர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131